பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 10 2023　　12 40
திங்கட்கிழமை　　நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

2. அரசுமுறை பயணமாக இந்தியா வந்துள்ள டான்சானிய அதிபர் சாமியா **Suluhu** ஹாசன், இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திரமோடியை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

3. இஸ்ரேலில் உள்ள இந்தியர்களை பாதுகாப்பாக தாயகம் அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

4. தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

5. உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட்போட்டியில் நெதர்லாந்து இன்று நியூசிலாந்து அணியை எதிர்கொள்கிறது.

---- *<u>இனி விரிவான செய்திகள்</u>* --

**[]<<<>>>[]**

ராஜஸ்தான், மத்திய பிரதேசம், தெலங்கானா, சத்தி.ஷ்கர் மற்றும் மிஸோராம் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேதிகள் சற்று முன் அறிவிக்கப்பட்டன.

புதுதில்லியில் செய்தியாளர்களை சந்தித்த தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார், மிஸோராமில் நவம்பர் ஏழாம் தேதியும், மத்திய பிரதேசத்தில் நவம்பர் 17-ஆம் தேதியும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறும் என்று அறிவித்தார்.

ராஜஸ்தானில் நவம்பர் 23-ஆம் தேதியும், தெலங்கானாவில் நவம்பர் 30-ஆம் தேதியும், ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

சத்திஷ்கரில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறும் என்று கூறிய தலைமை தேர்தல் ஆணையர், நவம்பர் 7 மற்றும் 17- ஆகிய தேதிகளில் வாக்குப்பதிவு நடைபெறும் என்றார்.

இந்த மாநிலங்களில் பதிவாகும் வாக்குகள் டிசம்பர் மூன்றாம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் என்று தலைமை தேர்தல் ஆணையர் அறிவித்தார்.

இந்த ஐந்து மாநிலங்களிலும் மொத்தம் 679 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெறும் என்றார்.

மொத்தம் 16 கோடி வாக்காளர்கள் இந்த தேர்தலில் வாக்களிக்க இருப்பதாகக் கூறிய அவர். 60 லட்சம் பேர் முதல்முறை வாக்காளர்கள் என்று தெரிவித்தார்.

ஒரு லட்சத்து 77 ஆயிரம் வாக்குச்சாவடிகளில், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மையங்களில் சி சி டி வி கேமராக்கள் பொருத்தப்படும் என்றும், அவற்றை நேரடியாக கண்காணிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அனைத்து வாக்குச்சாவடிகளிலும் குறைந்தபட்ச வசதிகள் ஏற்படுத்தப்படும் என்றும், தேர்தல் நடத்தை நெறிமுறைகள் பின்பற்றப்படுகிறதா என்பதை கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றம் அவர் தெரிவித்தார்.

மத்திய பிரதேச மாநிலத்தில் பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகள் மற்றும் வனப்பகுதிகளில் வாக்குப்பதிவு மையங்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

தேர்தலின்போது குளறுபடிகள் நேரிட்டால் அதனை தெரிவிப்பதற்கு சி-விஜில் செயலி மூலம் பொதுமக்கள் புகார் அளிக்கலாம் என்று அவர் குறிப்பிட்டார்.

புகார் பதிவு செய்த ஒரு மணி நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு ராஜீவ்குமார் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள டான்சானிய அதிபர் சாமியா **Suluhu** ஹாசன் பிரதமர் திரு நரேந்திரமோடியை இன்று புதுதில்லியில் சந்தித்தார்.

பாதுகாப்பு, வர்த்தகம், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உடன்பாடுகளை ஏற்படுத்துவது தொடர்பாக இருதரப்பு ஆலோசனைகளை அவர் மேற்கொண்டு வருகிறார்.

முன்னதாக இன்று காலை புதுதில்லி ராஜ்காட்டில் மகாத்மா காந்தியின் நினைவிடத்தில் அவர் அஞ்சலி செலுத்தினார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் அவருக்கு பாரம்பரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

அப்போது செய்தியாளர்களை சந்தித்த அவர், இந்தியாவுக்கும் - டான்சானியாவுக்கும் இடையே உள்ள நட்புறவு குறித்து பெருமிதம் தெரிவித்தார்.

அரசியல் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக இரு நாடுகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் டான்சானியா அதிபர் இந்தியா வருகை தந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வையும் டான்சானியா அதிபர் இன்று சந்திக்கிறார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெறும் அரசு விருந்திலும் அவர் பங்கேற்கிறார்.

புதுதில்லியில் நாளை நடைபெறவுள்ள வர்த்தகம் மற்றும் முதலீடு தொடர்பான மாநாட்டிலும் அவர் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

**[]<<<>>>[]**

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் இத்தாலி மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கு இன்று பயணம் மேற்கொள்கிறார்.

முதல்கட்டமாக ரோம் செல்லும் அமைச்சர், இத்தாலியின் பாதுகாப்பு அமைச்சர் **Geido crosetto**-வை சந்திக்கிறார்.

இந்த ஆண்டு மார்ச் மாதம் இந்தியாவுக்கு வருகை தந்த அவர், பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான உடன்பாடுகளை ஏற்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாலி பயணத்தை முடித்துக் கொண்டு திரு ராஜ்நாத்சிங், பிரான்ஸில் நடைபெறும் பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

பாரிஸில், பிரான்சின் பாதுகாப்பு அமைச்சர் திரு ஜெபாஸ்டியன் **Levornu** -வை சந்திக்கிறார்.

இந்தியா – பிரான்ஸ் இடையே அதிகரித்து வரும் பாதுகாப்பு ஒத்துழைப்பை அடுத்து, அதன் தொடர்புடைய ஆலோசனைகளை அவர் மேற்கொள்ளவுள்ளார்.

அவரது பயணத்தின்போது பாதுகாப்பு தளவாட தொழில் உற்பத்தியாளர்களையும், தலைமை நிர்வாகிகளையும் அவர் சந்திக்கவுள்ளார்.

**[]<<<>>>[]**

இந்திய வெளியுறவுத்துறை சேவை தினம் இன்று கொண்டாடப்படுகிறநது.

இந்நாளையொட்டி வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், வெளியுறவுத்துறை அதிகாரிகளுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகக் கூறியுள்ளார்.

உலகில் நிலவும் அசாதாரண சூழலுக்கு இடையே இந்தியா தனது நிலையை உறுதியுடன் மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளில் அதிகாரிகள் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அடுத்த 25 ஆண்டுகளுக்கு இந்தியா தொடர்ந்து முன்னிலை வகிப்பதற்கான நம்பிக்கையுடன் அதிகாரிகள் பணியாற்ற வேண்டுமென்று திரு ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

**[]<<<>>>[]**

பிரதமரின் மத்ஸிய சம்பதா திட்டத்தின் கீழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலா தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய அரசின் திட்டங்கள் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டு வரும் அவர் இன்று விழுப்புரம் மாவட்டத்தில் அனுமந்தை மீனவ கிராமத்தில், மீனவர்களுடன் கலந்துரையாடினார்.

அவர்களுக்கு கிஷான் கடன் அட்டைகளை அமைச்சர் வழங்கினார்.

பின்னர் பேசிய அவர், மீன்வளத்துறையுடன் தொடர்புடைய அனைத்து தொழில்களிலும் ஈடுபடுபவர்களுக்கும் மத்திய அரசு கடன் உதவிகளை வழங்கி வருவதாகக் கூறினார்.

விஷ்வகர்மா திட்டத்தில் பயன்பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இன்று காலை தொடங்கியது.

அவை கூடியதும் மறைந்த முன்னாள் உறுப்பினர்கள் மூன்று பேருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதையடுத்து பஞ்சாப் மாநில முன்னாள் முதலமைச்சர் பிரகாஷ் சிங் பாதல், தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயவலர் ப சபாநாயகம், கேரள மாநில முன்னாள் முதலமைச்சர் உம்மன்சாண்டி, வேளாண் விஞ்ஞானி எம் எஸ் சுவாமிநாதன் ஆகியோரின் மறைவுக்கு இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**[]<<<>>>[]**

காவிரி விவகாரத்தில் தமிழகத்தின் உரிமை நிலைநாட்டப்படும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் அரசினர் தனி தீர்மானம் கொண்டு வந்து பேசிய அவர், உச்சநீதிமன்ற இறுதி தீர்ப்பில் வரையறுக்கப்பட்டுள்ளபடி தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறந்துவிடுவதற்கு வலியுறுத்தப்படும் என்று கூறினார்.

காவிரி விவகாரத்தில் அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்று முதலமைச்சர் கேட்டுக் கொண்டார்.

*( சவுண்ட்பைட் - மு க ஸ்டாலின் ) -28—செகண்ட்*

[]<<<>>>[]

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் துறைமுகத்திலிருந்து ஆழ்கடல் பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்று காணாமல் போன மீனவர்களை தேடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த பத்து நாட்களாக மீனவர்களை தேடும் பணி நடைபெற்று வரும் நிலையில், இரண்டு மீனவர்களின் சடலங்கள் கடலோர காவல்படை மூலம் மீட்கப்பட்டதாக மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலா தெரிவித்துள்ளார்.,

[]<<<>>>[]

நாடு முழுவதும் 355 முக்கிய மையங்களில் ஒரு லட்சத்து 73 ஆயிரத்து 355 துணை ராணுவ வீரர்கள் தொழில் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக அப்படைப்பிரிவின் தலைவர் திரு சரவணன் தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் செயல்பட்டு வரும் மத்திய தொழில் பாதுகாப்பு படைப் பிரிவின் மண்டல பயிற்சி மையத்தில் நடைபெற்ற பயிற்சி நிறைவு விழாவில் அவர் பேசினார்.

கடந்த 11 மாத காலத்தில் பயிற்சி முடித்த வீரர்களுக்கு அவர் உறுதிமொழி செய்து வைத்தார்.

இந்த பயிற்சியில் 657 பெண்கள் உட்பட 772 வீரர்கள் பயிற்சியை நிறைவு செய்தனர்.

இவர்கள் அனைவரும் மத்திய அரசின் கீழ் செயல்படும் முக்கிய அலுவலகங்களில் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

1969-ஆம் ஆண்டு முதல் 355 மையங்களில் மத்திய தொழில் பாதுகாப்புப்படை வீரர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

[]<<<>>>[]

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன ஹமாஸ் அமைப்புக்கும் இடையே நடைபெற்று வரும் சண்டையில் இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

காஸா பகுதியில் நடைபெற்று வரும் சண்டை தொடர்ந்து நீடிப்பதால் உயிரிழப்புகள் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இஸ்ரேல் பாதுகாப்புப்படை வீரர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாகவும், பதிலடியாக இஸ்ரேல் விமானம் மூலம் தாக்குதல் நடத்தி வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் காஸா பகுதியில் வாழும் 70 ஆயிரம் பாலஸ்தீனர்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்து வருவதாக ஐ நா தெரிவித்துள்ளது.

அவர்களுக்கு அடிப்படை தேவைகளான உணவு மற்றும் தண்ணீர் வழங்கவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று ஐ நா கேட்டுக் கொண்டுள்ளது.

இதனிடையே இஸ்ரேலில் உள்ள இந்தியர்களை பாதுகாப்பாக தாயகம் அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலில் உள்ள இந்தியர்கள், இந்திய தூதரகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து டெல்-அவிவிற்குச் செல்லும் விமானங்கள் வரும் 14-ஆம் தேதி வரை ரத்து செய்யப்பட்டுள்ளதை அடுத்து, மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்து 400-ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 20 ஆண்டுகளுக்குப் பின்னர் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய நிலநடுக்கமாக இது கருதப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை நேரிட்ட இந்த நிலநடுக்கத்தினால் குறைந்தது 465 குடியிருப்புகள் இடிந்து விழுந்ததாகவும், பல அடுக்குமாடி கட்டிடங்கள் நிலைகுலைந்துள்ளதாகவும் ஐ நா தெரிவித்துள்ளது.

மூன்று முறை ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் இந்துகுஸ் மலைப்பகுதியை மையமாகக் கொண்டது.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் நெதர்லாந்து அணி – நியூசிலாந்தை அணியை எதிர்கொள்கிறது.

ஹைதராபாத்தில் நடைபெறவுள்ள இப்போட்டி பிற்பகல் இரண்டு மணிக்கு தொடங்குகிறது.

***End of News***